செய்தி வெளியீடு எண் : 562 நாள்: 08.04.2022

## செய்தி வெளியீடு

### பெரியார் நகர், மேம்படுத்தப்பட்ட அரசு புறநகர் மருத்துவமனையில் 75 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள இரத்த சுத்திகரிப்பு மையம் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (8.4.2022) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் சென்னை, பெரியார் நகரில் உள்ள மேம்படுத்தப்பட்ட அரசு புறநகர் மருத்துவமனையில் 75 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 10 படுக்கைகள் கொண்ட இரத்த சுத்திகரிப்பு மையத்தை (Dialysis Centre) திறந்து வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு, பொதுமக்களின் வீட்டிற்கே நேரடியாகச் சென்று தொற்றா நோய்களுக்கான பரிசோதனைகளைச் செய்தல், தேவைப்படும் மருந்துகளை வழங்குதல், இயன்முறைச் சிகிச்சை போன்ற மருத்துவச் சேவைகள் வழங்கும் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், சாலை விபத்தால் ஏற்படும் உயிரிழப்பைக் குறைத்திட, விபத்து ஏற்பட்ட முதல் 48 மணி நேரத்திற்குள் கட்டணமில்லா உயிர் காக்கும் அவசர சிகிச்சைக்கான நம்மைக் காக்கும் 48 திட்டம், தமிழ்நாடு மக்களின் சுகாதார தரத்தினை மேம்படுத்திட தமிழ்நாடு மாநில சுகாதாரப் பேரவையை தொடக்கம், கிண்டி, கிங் நோய் தடுப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் ரூ.230 கோடி மதிப்பீட்டில் 1000 படுக்கைகளுடன் கூடிய பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டியது, மாநில அரசு மருத்துவமனைகளில் முதலாவதாக தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் ரூ.34.60 கோடி மதிப்பீட்டில் அதிநவீன இயந்திர மனிதவியல் அறுவை சிகிச்சை மையம் அமைத்தது, தொலைதூர கிராமங்களுக்கு மருத்துவ சேவையை வலுப்படுத்த 70 கோடி ரூபாய் செலவில் புதிதாக 389 நடமாடும் மருத்துவமனைகளின் சேவையை தொடங்கியது போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

தரமான மருத்துவ வசதிகளைப் பொது மக்களுக்கு எளிதாக கிடைக்கச் செய்வதில் மட்டும் கவனம் செலுத்தாமல், நோய் தடுப்பு

பணிகளிலும் கவனம் செலுத்தி வருவதால், முக்கிய சுகாதார குறியீடுகளில் இந்தியாவில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது.

அதன் தொடர்ச்சியாக, 2021-22ஆம் ஆண்டிற்கான மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையில், சென்னை, கொளத்தூர், பெரியார் நகர், மேம்படுத்தப்பட்ட அரசு புறநகர் மருத்துவமனையில் 75 இலட்சம் ரூபாய் செலவில் டயாலிசிஸ் மையம் ஒன்று அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, பெரியார் நகர், மேம்படுத்தப்பட்ட அரசு புறநகர் மருத்துவமனையில் 75 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 10 படுக்கைகள் கொண்ட இரத்த சுத்திகரிப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த இரத்த சுத்திகரிப்பு மையத்தில் ஒரு மாதத்திற்கு 750 நபர்களுக்கு டயாலிசிஸ் சிகிச்சை மேற்கொள்ள இயலும். ஒரு நபருக்கு ஒருமுறை இரத்த சுத்திகரிப்பு செய்திட 600 ரூபாய் செலவாகும். இந்த தொகை முழுவதும் முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இலவசமாக செய்யப்படும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கலாநிதி வீராசாமி, துணை மேயர் திரு. மு.மகேஷ்குமார், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

.........

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in